# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 18 ஆம் ஞாயிறு | 2 ஆகஸ்ட் 2026

## ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

### மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்




**மாதாந்திர நோக்கம்:**
**சமூகம்:**
**வேற்றுமையில் ஒற்றுமை**

2026 செப்டம்பர் 9 முதல் 13 வரை, மலேசியா முழுவதிலும் இருந்து சுமார் 800 பங்கேற்பாளர்கள், முதல் மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026-க்காக சிபுவில் ஒன்றுகூடுகிறார்கள். சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவோடு இணைந்து ஒன்பது மறைமாவட்டங்களைப் பிரதிநிதிக்கும் அவர்கள், நமது மேய்ப்புப்பணி மாநாடு மற்றும் நோக்கங்களின் திசைகள் குறித்து இன்றைய மலேசியத் திருஅவைக்குத் தூய ஆவியார் என்ன கூறுகிறார் என்று இறைவேண்டுதல் செய்யவும், செவிமடுக்கவும், தேர்ந்துதெளியவும் கேட்கவும் ஒன்றுகூடுவார்கள்.

மமேமா (MPC) என்பது நமது அருள்பணியாளர்கள், துறவறத்தார், இளைஞர்கள், பங்கு, மறைமாவட்டத் திருத்தூதர் மன்றம், மறைமாவட்ட மற்றும் பிராந்திய சபைகளின் கூட்டு முயற்சியாகும். இந்தக் கூட்டங்களின் மூலம், திருஅவையானது, குடும்பம், திருஅவை சூழலியல் மற்றும் சமூகம் ஆகிய நான்கு முக்கிய ஆயர் மேய்ப்புப்பணித் துறைகள் குறித்துச் சிந்தித்து, இறைமக்களாக நாம் எவ்வாறு ஒன்றாக முன்னேறிச் செல்ல அழைக்கப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறது

தீபகற்ப மலேசியாவில், “புதிய முறையில் திருஅவையாக இருத்தல்” என்ற தொலைநோக்குப் பார்வை, 1976 ஆம் ஆண்டு பினாங்கு, குருத்துவ கல்லூரியில் நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டின் வேர்களை முன்னோக்கிப் பார்க்கிறது. . மேலும், ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கும் நடைபெற்ற அடுத்தடுத்த தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி பேரவைகள் மூலம் இது மேலும் மேம்படுத்தப்பட்டது.

அந்தப் பயணம், தீபகற்ப மலேசியாவில் உள்ள திருஅவை, அக்காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப தனது மேய்ப்புப்பணிக்கான நோக்கங்களைப் பகுத்தறிய உதவியது. உதாரணமாக, 2016 ஆம் ஆண்டில், திருஅவை அனைவரையும் உள்ளடக்கியதாகவும், படைப்பாற்றல் மிக்கதாகவும், பாலங்களைக் கட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்ற அழைப்பைப் பகுத்தறிந்தது. இப்போது, 2026 ஆம் ஆண்டில், MPC சபா, சரவாக் மற்றும் தீபகற்பமலேசியாவையும் ஒன்றிணைப்பதன் மூலம் இந்தப் பயணத்தை விரிவுபடுத்துகிறது.

முற்றிலும் புதிய ஒன்றை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, MPC 2026, திருச்சபை ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒன்றை ஆழப்படுத்த முயல்கிறது. அதன் நான்கு மேய்ப்புப் பணிப் பிரிவுகளும் திருஅவையின் போதனைகளில் ஆழமாக வேரூன்றியுள்ளன; அவை அமோரிஸ் லேடிசியா-அன்பின் மகிழ்ச்சி, கிறிஸ்டஸ் விவிட் (கிறிஸ்து வாழ்கிறார் ) (குடும்பம்) , எவாஞ்செலி காடியம் நற்செய்தியின் மகிழ்ச்சி - (திருஅவை) ஃபிரடெல்லி டுட்டி (சமூகம்), மற்றும் லௌடடோ சி' (சூழலியல்) ஆகியவற்றிலிருந்து உத்வேகம் பெறுகின்றன.

இதில் வேறுபடக்கூடிய கருத்து, வெளிப்படும் மேய்ப்புப் பணி சார்ந்த முனைப்பு ஆகும். மலேசியா முழுவதும் குடும்ப வாழ்க்கை வேறுபடுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பங்குத்தளங்களில் உள்ள குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அல்லது பல பெற்றோர்கள் வேலைக்காகத் தினமும் சிங்கப்பூருக்குச் சென்று வரும் ஜோகூர் பாரு போன்ற இடங்களில் உள்ள குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பினாங்கு, மலாக்கா, சிபு, கூச்சிங், கோத்தா கினபாலு, அல்லது சண்டக்கான் ஆகிய இடங்களில் உள்ள குடும்பங்களின் சவால்களிலிருந்து வேறுபட்டவை.

எனவே, மமேமா (MPC) 2026, திருஅவையின் உலகளாவிய போதனைகளை மலேசிய வாழ்வின் உறுதியான யதார்த்தங்களுக்குள் உள்வாங்க முயல்கிறது. நமது சொந்த கலாச்சாரங்கள், மொழிகள், போராட்டங்கள் மற்றும் நம்பிக்கைகளுக்குள் ஒன்றாகப் தேர்ந்துதெளிவதன் மூலம், நாம் ஒரு உண்மையான மலேசிய திருஅவை வழியில் தொடர்ந்து வளர்கிறோம்அது வேற்றுமையில் ஒன்றுபட்டதாகவும், நற்செய்தியில் வேரூன்றியதாகவும், இன்றைய உலகில் பொருத்தமானதாகவும், உயிரோட்டமுள்ளதாகவும், நற்செய்தி அறிவிப்பதாகவும் இருக்க அர்ப்பணிக்கப்பட்டதாகவும் உள்ளது.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)
MPC2026

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 55: 1-3
திருப்பாடல் 145: 8-9, 15-18
உரோமையர் 8: 35, 37-39
மத்தேயு 14: 13-21

### இறைவேண்டல்

ஆண்டவரே, மமேமா (MPC) 2026 இல் நாங்கள் தேர்ந்து தெளியும் செயல்களிலிருந்து உருவாகும் மேய்ப்புப் பணிப் பாதைகள், எங்கள் உள்ளூர் நம்பிக்கை சமூகங்களைச் செழுமைப்படுத்தி, பலப்படுத்தட்டும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2026

வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | Email: api@archkl.org